

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T95R0

நோயாளி தகவல் கையேடு

# ஆன்டிபயோடிக் மருந்துகள்
## (ANTIBIOTICS)

டோக்ஸிசைக்ளின் (Doxycycline)
மைனோசைக்ளின் (Minocycline)
டெட்ராசைக்ளின் (Tetracycline)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**டோக்ஸிசைக்ளின் (Doxycycline), மைனோசைக்ளின் (Minocycline) மற்றும் டெட்ராசைக்ளின் (Tetracycline) ஆகியவை நுண்ணுயிர்த் தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவை வாய்வழி எடுக்கப்படும் மருந்துகளாகக் கிடைக்கின்றன. டெட்ராசைக்ளின் கண் மற்றும் தோல் களிம்புகளாகவும் கிடைக்கிறது.**

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

தொற்றின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். மருத்துவர் கூறும் அளவில் இந்த மருந்தை உட்கொள்ளுங்கள்.

மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லை என்றால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

வாய்வழி குழல் மாத்திரை (Capsule):

மருந்தை ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள். இந்த மருந்துகளைப் பொதுவாக வெறும் வயிற்றில் எடுப்பது சிறந்தது (உணவுக்கு 1 மணி நேரத்திற்கு முன்பு, அல்லது உணவு உண்ட 2 மணி நேரம் கழித்து). எனினும், உங்களுக்கு வயிறு பாதித்தால், மருந்தை உணவுடன் எடுக்கலாம்.

இந்த மருந்துகளை எடுத்த 2 மணி நேரத்திற்குள், பால், பால் பொருட்கள், அமில எதிர்ப்பு மருந்துகள் அல்லது இரும்புச்சத்து உட்கொள்ளாதீர்கள்.

மருந்து எடுக்கத் தொடங்கிய சில நாட்களில் குணம் தெரிய ஆரம்பித்தாலும், கொடுக்கப்படும் மாத்திரைகள் எல்லாவற்றையும் நீங்கள் முடித்துவிட வேண்டும். பாதியிலேயே நிறுத்தினால் கிருமித்தொற்று மீண்டும் ஏற்படலாம் அல்லது மருந்துக்கு எதிர்ப்பு உருவாகலாம்.

மருந்தை ஒரே சீரான கால இடைவெளிகளில் உட்கொள்ளுங்கள்.

கண் களிம்பு :

- கைகளைக் கழுவுங்கள்.
- கீழ் கண் இமையை மெதுவாக இழுத்து, ஒரு பை போல் ஆக்குங்கள். டியூபைப் (tube) பிதுக்கி களிம்பை அதில் இடுங்கள். மருத்துவர் வேறு விதமாகக் கூறினாலன்றி, வழக்கமாக ஒரு 1-செமீ நீளக் களிம்பு போதுமானது. கண்களை மெதுவாக மூடி, 1 அல்லது 2 நிமிடங்களுக்கு அப்படியே மூடி வைத்திருங்கள்.
- மருந்தில் கிருமிகள் தொற்றாதிருக்க, டியூபின் நுனி எந்தப் பகுதியையும் (கண் உட்பட) தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- களிம்பைப் பயன்படுத்திய பிறகு, டியூபின் நுனியை ஒரு சுத்தமான டிஷ்யு தாளால் துடைத்துவிட்டு, மீண்டும் மூடி போட்டு இறுக்கமாக மூடி விடுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

தோல் களிம்பு :

- கிருமித்தொற்று முற்றிலும் நீங்குவதற்கு இந்த மருந்தை சிகிச்சைக் காலம் முழுவதும் தொடர்ந்து பயன்படுத்திவர வேண்டும்.
- இந்த மருந்து துணிகளில் கறையை ஏற்படுத்தலாம் என்பதால் அது உங்கள் உடையில் படாமல் பார்ததுக் கொள்ளுங்கள்.
- மருந்து கண்களிலும் பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- மருந்தைப் போடுவதற்கு முன்பாக, பாதிக்கப்பட்ட இடத்தை வெதுவெதுப்பான சோப்பு நீரில் நன்றாகக் கழுவி விட்டு, ஈரம் போக நன்கு துடைத்துவிடுங்கள்.
- மருந்தைப் போட்ட பிறகு, நீங்கள் விரும்பினால், அவ்விடத்தை ஒரு மெல்லிய மருத்துவ சல்லடைத்துணி (gauze dressing) கொண்டு மூடலாம்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

குமட்டல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற பக்க-விளைவுகள் சாதாரணமாக ஏற்படலாம்.

இந்த மருந்துகள் சூரிய ஒளியில் தோலை பாதிப்படையச் செய்யலாம். சூரிய ஒளியில் செல்லும்போது தோல் தடிப்பு, அரிப்பு, தோல் சிவத்தல் அல்லது தோல் கருகுதல் ஏற்படலாம்.

இம்மருந்துகள் சில பிள்ளைகளின் மற்றும் குழந்தைகளின் பற்களை நிறம் மாறச் செய்யலாம். இது ஏற்பட்டால், அல்லது இது குறித்து உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், மருத்துவரிடம் விசாரியுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

- வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் ஏற்கனவே உட்கொண்டு வந்தால் அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும; முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்துகள் பிள்ளைகளின் பற்களை நிரந்தரமாக நிறம் மாறச் செய்யலாம். எனவே, மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் இவற்றை 8 வயது மற்றும் அதற்குக் குறைந்த வயதுடைய பிள்ளைகள் அல்லது குழந்தைகளுக்குக் கொடுக்காதீர்கள்.
- அறிகுறிகள் சில நாட்களில் மேம்படவில்லை என்றால் (முகப்பரு நோயாளிகளுக்கு சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் ஆகலாம்), அல்லது அவை மோசமானால் மருத்துவரைப் பாருங்கள்.
- சூரிய ஒளியில் செல்லாதீர்கள், குறிப்பாக காலை 10மணியிலிருந்து மதியம் 3மணி வரை. வெய்யிலில் செல்லும்போது பாதுகாப்பு உடைகள் அணியுங்கள் மற்றும் குறைந்தது 15 அளவுடைய தோல் பாதுகாப்பு காரணி (skin protection factor) உள்ள சூரியக் கதிர்த் தடுப்பு களிம்பு தடவிச் செல்லுங்கள்.

இந்த மருந்துகளை எடுக்கும்போது, ஈஸ்ட்ரோஜென் (oestrogen) கருத்தடை மாத்திரைகள் பலனளிக்காமல் போகலாம். எனவே, இம்மருந்துகளை எடுக்கும்போது நீங்கள் வேறுவிதமான, அல்லது கூடுதல் கருத்தடை முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் மைனோசைக்ளின் எடுத்துவந்தால், தலைக் கிறுகிறுப்பு, தலைச்சுற்றல் அல்லது தடுமாற்றம் ஏற்படலாம். எனவே, வாகனம் ஓட்டுவதற்கு முன்பு, இயந்திரங்களை இயக்குவதற்கு முன்பு, அல்லது, கிறுகிறுப்பு மற்றும் விழிப்பாக இல்லாதபோது உங்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்வதற்கு முன்னால், இந்த மருந்து உங்களை எப்படிப் பாதிக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.